சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. OS. 50/2021**

2024ம் ஆண்டு மார்ச் மாதம் 19ம் நாள் செவ்வாய்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய **வா.சா.1**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.ராதா எழுத்தர் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாஸ்கரன் | தொழில் | |
| தந்தை பெயர் | பெருமாள் | ஜாதி | |
| கிராமம் | ஆவடி | சமயம் | |
| தாலுக்கா | திருவள்ளூர் | வயது | |

**19.03.2024** முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என்தரப்பு சான்றாவணங்களாக, 14.07.1951 தேதியிட்ட அசல் கிரய பத்திரம் **வா.சா.ஆ.1,** 30.08.1978 தேதியிட்ட அசல் கிரய பத்திரம் **வா.சா.ஆ.2,** 09.03.1952 தேதியிட்ட அசல் கிரய பத்திரம் **வா.சா.ஆ.3,** பட்டா நெம்பர் 715-க்கான 29.11.1983 தேதியிட்ட சிட்டா **வா.சா.ஆ.4,** பட்டா நெம்பர் 1314-க்கான 29.11.1983 தேதியிட்டசிட்டா **வா.சா.ஆ.5,** 14.10.2016 தேதியிட்ட பெருமாள் இறப்பு சான்று அசல் **வா.சா.ஆ.6,** 31.03.2016 தேதியிட்ட கமலா இறப்பு சான்று அசல் **வா.சா.ஆ.7,** 27.05.2020 தேதியிட்ட பெருமாள் வாரிசு சான்று அசல் **வா.சா.ஆ.8**, 09.01.2021 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.9**, 1ம் பிரதிவாதியின் அஞ்சல ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.10,** 2ம் பிரதிவாதியின் அஞ்சல ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.11,** (வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 சிட்டா பிரதிவாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) தாக்கல் செய்கிறேன். வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பு பிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.